04.02.2025 OS.No.170/2015 DW1 Name :.குருமூர்த்தி

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்து தொடர்பான அசல் ஆவணங்கள் எங்களுடைய வங்கியில் தாக்கல் செய்யபடவில்லை. வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்தா அல்லது தனி குடும்ப சொத்தா என்பது தெரியுமா என்றால் 1991ல் எங்கள் வங்கியில் கடன் கொடுக்கபட்டுள்ளது. அதில் மூன்று நபர்கள் கடன் வாங்கியுள்ளார்கள். அவர்கள் வங்கியில் அசல் ஆவணங்கள் இல்லை என்று கூறியுள்ளார்கள். அதற்கு கடிதம் எழுதி கொடுத்துள்ளார்கள். அசல் அடமான பத்திரம் எங்கு உள்ளது என்றால் 1991 பெற்ற கடன் திரும்ப கட்டாததால் டிஆர்டி மூலமாக சொத்து விற்கபட்டுள்ளது.
2. அடமான பத்திரம் எங்கு உள்ளது என்று என்னால் கூறமுடியாது. 1991ல் வங்கியில் கடன் கொடுக்கும்போது நான் பணியில் இல்லை. 2014ல் ஆண்டில் தான் நான் வங்கியில் வேலைக்கு சேர்ந்தேன். ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சி கூறுகிறேன். எனக்கு நேரிடையாக எந்த விவரமும் தெரியாது. வங்கியில் அடமானம் தொடர்பான ஆவணங்கள் எதுவும் இல்லை. கடன் பற்றி நேரிடையாக தெரியாது. மாவட்டம் விட்டு மாவட்டம் உள்ள சொத்திற்கு கடன் கொடுக்கமுடியாது என்றும் அசல் ஆவணம் இல்லாமல் கடன் கொடுக்கமுடியாது என்றும் உயர் அதிகாரி கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியாது.
3. அடமான தொகை ரூ.16,50,208/- அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதை ஏற்றுகொள்ளமுடியாது என்றால் சரியல்ல. அடமான ஆவணத்தில் எவ்வளவு தொகை உள்ளது என்று தெரியாது. அடமான பத்திரத்தின் மூலமாக சொத்தின் மதிப்பை விட

அதிகமாக கடன் கொடுப்பீர்களா என்றால் வாங்கும் கடனை பொறுத்து அது அமையும். சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வங்கி அதிகாரிகள் சென்று அடமானத்தை பதிவு செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கிருஷ்ணன் கைலாசம் பெத்தபோயான் ஆகியோர்கள் வங்கிக்கு ஆதரவாக அடமான பத்திரம் கொடுத்துள்ளார்கள் அதனால் கடன் கொடுத்துள்ளோம்.

4. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சொத்தின் உரிமையாளர் என கூறும் எங்கள் பாட்டி அங்காயம்மாள் வங்கிக்கு ஆவணம் எதுவும் எழுதிகொடுக்கவில்லை. எங்களுடைய வங்கியில் பாகபிரிவினை ஆவணத்தின் நகலை தாக்கல் செய்துள்ளார்கள். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு பாகபிரிவினை எதுவும் ஆகவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைலாசம், கிருஷ்ணன், பெத்தபோயன் ஆகியோர்கள் நான் பார்த்ததில்லை. கிருஷ்ணன் எங்களுடைய கோடம்பாகம் கிளையில் வங்கி கணக்கு வைத்திருந்த காரணத்தில் எங்கள் வங்கியில் கடன் கொடுத்தோம்.

5. கிருண்ணன் என்பவர் காணாமல் போய்விட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. திருப்பத்தூர் உள்ள சொத்திற்கு கோடம்பாகம் கிளை கடன் கொடுக்கமுடியாது ஆர்டியை தகவல் மூலம் பெறபட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. அடமான சொத்திற்கும் எங்கள் வங்கிக்கும் எந்த உரிமையும் என்றால் சரியல்ல. திருப்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 2 முறை ஆவணங்கள் பதிவு செய்யபட்டுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது. விடுமுறை நாளில் ஆவணம் பதிவு செய்யபட்டுள்ளது மோசடியானது என்றும் 17.01.1991 விடுமுறை நாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. பொதுஅதிகார பத்திரம் மோசாடியானது என்று சொன்னால் சரியல்ல. சொத்துதாரருக்கு வாரிசு பிறந்தால் அவருக்கு சட்டபடி பாகம் வரும் என்றால் சரிதான். பட்டாதாரர், கிரையதாரர், சொத்துதாரர் வங்கிக்கு ஆவணம் எழுதிகொடுத்தால் செல்லும் என்றால் சரிதான். திருப்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ரூ.3000த்திற்கு பத்திரம் வாங்குவதற்கு பதிலாக ரூ.300 பத்திரம் வாங்கி பதிவு செய்துள்ளதால் அது மோசடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பவர் பத்திரம் ரூ.35க்கு எழுதவேண்டியதை ரு.20 பத்திரத்தில் எழுதியுள்ளது மோசடி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கலைசெல்வன் என்பவரை யார் என்று தெரியாது.
7. அடமான பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள நபர்கள் போலியானவர் என்றும் அவர்களுடைய முகவரி போலியானது என்றும் சொன்னால் சரியல்ல. சொத்தின் சர்வே எண் தற்போது என்னால் கூறமுடியாது. செக்குபந்தியும் என்னால் கூறமுடியாது. திருப்பத்தூர் மாவட்டம் செவாத்துர் கிராமத்தில் சொத்து உள்ளது. வீரபோயன், அங்காயம்மாள், லட்சுமணபோயன் ஆகியோர்களுடைய ஆவணங்கள் எதுவும் எங்கள் வங்கியில் இல்லை. அங்காயம்மாள் வாரிசுகள் என்றும் அடமான பத்திரத்தில் எழுதபட்டுள்ளாதா என்று எனக்கு தெரியாது.
8. பவர் பத்திரத்தில் எழுதபட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது ஆவணங்கள் அனைத்தும் போலி என்று கூறினால் சரியல்ல. சொத்தின் விஸ்தீரணம் என்னால் சொல்லமுடியாது. சொத்தின் அளவு 8 ஏக்கர் 40 செண்ட் உள்ளது. 9 ஏக்கர் 40 செண்ட் என மோசடியாக பதிவாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கலைசெல்வன் முகவரி பற்றி எனக்கு தெரியாது. அடமானம் வங்கி

பெயருக்கு தான் பதிவு செய்யபட்டு பின்னர் டிஆர்டி மூலமாக சொத்து விற்பனை ஆகியுள்ளது. கோடம்பாக்கம் கிளை வங்கிக்கு தான் அடமானம் எழுதபட்டுள்ளது. அவ்வாறு அடமான பத்திரத்தில் கோடம்பாக்கம் கிளை குறித்து எந்த விவரமும் இல்லை என்றால் சரியல்ல.

9. பெத்தபோயன் மகன்கள் ரவிசந்திரன், சதாசிவம் என்பவர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அவர்கள் மைனர்கள் என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. நான் எந்த ஆவணங்களையும் வழக்கில் தாக்கல் செய்யாததால் வழக்கு சொத்திற்கும் எங்கள் வங்கிக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/02/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.02.04 17:12:18 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.